# 4 சடங்குகளும் சம்பிரதாயங்களும்

## திருமணச் சடங்கு

சடங்குகள் சமயத்தின் பண்பாட்டுப் பிரதிபலிப்புகளாகும். வழிவழியாக வரும் மரபுகளைக் காத்திடும் பணிக்குச் சடங்குகள் பெரிதும் உதவுகின்றன. முன்னோர் இவற்றைக் கரணங்கள் என்கிறார்கள். உண்மையான உணர்வுடன் மனம் ஒன்றிச் செயற்பட்டால் சடுதியில் பயன்தருவது எனும் கருத்திலேயே சடங்குகள் செய்யப்படுகின்றன. முன்னோர்கள் செய்த செயல்களைக் காரண காரிய ஆராய்ச்சியில் ஈடுபடுத்தாமல் தாம்கண்டவாறே பின்பற்றுவதும் நிகழ்த்துவதும் சடங்கின் முறைமையாகும்.

வாழ்க்கை இன்பத்தைப் பெற்றுக்கொள்ளவும், துன்பத்தைப் பகிர்ந்து கொள்ளவும், கடமைகளை உணர்ந்து செயலாற்றி வெற்றிகண்டு வாழ்வினைப் பயனுள்ளதாக ஆக்கிக் கொள்ளவும் மக்கள் ஒப்புரவு முறையில் உதவியும் துணையுஞ் செய்து, உறவுகளை வலுப்படுத்திக் கொள்ளவும் சடங்குகள் உதவுகின்றன. இவ்வகையில் எமது சமயத்தில் மனித வாழ்வின் பிறப்பு முதல் இறப்பு வரை பலவித சடங்குகள் இடம்பெறுகின்றன.

உடலில் உயிர் உள்ளபோது ஆற்றப்படும் கிரியைகள் பூர்வக் கிரியை எனவும் உடலைப் பிரிந்த ஆன்மா மோட்சத்தினை அடையுமுகமாக ஆற்றப்படும் கிரியை அபரக்கிரியை எனவும் அழைக்கப்படுகின்றன. பூர்வக் கிரியைகளில் உபநயனச்சடங்கு, ருது சோபனச் சடங்கு, திருமணச் சடங்கு என்பன பிரதானமானவை. இவற்றுள் திருமணச் சடங்கு பற்றி மேல்வருமாறு கற்போம்.



### திருமணச் சடங்கு

திருமணச் சடங்கு என்பது ஆண், பெண் ஆகிய இருபாலாரையும் இல்லறத்தில் இணைப்பதற்காகச் செய்யப்படும் சடங்காகும். மானிடப் பிறப்பு எடுத்ததற்கு அறம், பொருள், இன்பம், வீடு என்பவற்றை அடைவதற்கு ஒரு வாழ்க்கைத் துணையைத் தேடி இணைத்துக் கொள்ளும் ஒரு நிகழ்வே திருமணமாகும்.

திருமணம் **''விவாகம்''** என்றும் கூறப்படும். **''விவாகம்''** என்பதற்குச் **''சிறப்பாகச் சுமப்பது''** என்று பொருள் உண்டு. **''வஹ்''** எனும் வினையடி **''சுமத்தல்''** என்ற கருத்தைத் தருகின்றது. ஆதலால் தர்ம காரியத்தைச் செய்ய வேண்டிய பொறுப்பு இந்த விவாகத்தில் நிச்சயிக்கப்படுகிறது. இந்தத் தர்ம நியதியைக் கொண்டே இல்லறம் எனப் போற்றப்படுகிறது. இது மங்கலத்தைத் தருவதால் **'கல்யாணம்'** என்றும் தெய்வத் தன்மை பொருந்திய மணம் என்பதால் **'திருமணம்'** எனவும் வழங்கப்படுகிறது.

## அ. திருமண நாளுக்கு முன்னர் நடைபெறும் நிகழ்வுகள்

திருமண நிகழ்ச்சிக்கு முன்பதாக நிச்சயதார்த்தம் நடைபெறும். தாரம்-மனைவி. தாரத்துவம் மனைவியாகும் தன்மையை நிச்சயப்படுத்துவது. இதனைத் தமிழில் திருமண உறுதி என்பர். இன்னார்க்கு இன்னார் உன உறுதி செய்யப்பட்டு மணமக்களது பெற்றோர், சான்றோர், சுற்றம் கூடிய அவையில் வெற்றிலை, பாக்கு, பழம் இவற்றுடன் மணஉறுதியையும் வைத்துச் சம்பந்திகள் பரிமாறுவர். பின் திருமண உறுதி வாசிக்கப்படும்.

பொன்னுருக்கு என்பது மாங்கல்யம் செய்வதற்கு நாள்பார்த்து மாப்பிள்ளை வீட்டில் பொன்னை உருக்குதல் ஆகும். இதில் மணப்பெண் தவிர ஏனைய உறவினர்கள், நண்பர்கள் கலந்து கொள்வர். இதன் போது பெண்வீட்டார் இனிப்புப் பலகாரம் கொண்டு செல்லுதல் சம்பிரதாயமாகும். இதே நாள் பெண்வீட்டிலும், மணமகன் வீட்டிலும் தனித்தனியே அவரவர்களின் வளவிலும் ஈசானமூலையில்(வடகிழக்கு) முகூர்த்தக்கால் (கன்னிக்கால்) ஊன்றுவர்.

இதற்கு இப்போது முள்முருக்கந் தடியை வெட்டி அதன் நுனியில் ஐந்து மாவிலைகளை மஞ்சள் பூசிய கயிற்றாற் கட்டிச் சுமங்கலிப் பெண்களால் நவதானியம் இட்டு ஊன்றப்படும். முகூர்த்தக்கால் ஊன்றிய பின் இருவீட்டாரும் திருமணச் சடங்குகள் முற்றாக முடியும் வரை எந்த விதமான அமங்கல நிகழ்ச்சிகளிலும் பங்கு கொள்ளக்கூடாது.

## ஆ. திருமணநாள் அன்று நடைபெறும் நிகழ்வுகள்.

திருமண நாளன்று நான்கு சுமங்கலிப் பெண்கள் மணமக்களுக்குப் பால், அறுகு வைத்து நீராட்டி அலங்கரிப்பர். சுபநேரத்தில் தோழனுடன் பெண்வீட்டார் மாப்பிள்ளை வீட்டிற்குச் சென்று பால், அறுகு வைத்து நீராட்டுவர். பின் மணப்பந்தலுக்கு அழைத்து வருவர். மாப்பிள்ளை வீட்டில் தலைப்பாகை வைத்தல் கடுக்கன் பூட்டுதல் போன்ற நிகழ்வுகள் நடைபெறும். மணப்பந்தலின்

முன்றலில் நிறைகுடம் வைத்து மங்கல விளக்கேற்றி வைப்பர். எல்லாக் காரியங்களுக்கும் முதலில் வணங்கும் விநாயகரை பசுவின் சாணத்தில் அல்லது மஞ்சள் மாவில் (பிள்ளையார் பிடித்து) எழுந்தருளச் செய்து மலர்சூட்டி மங்களப் பொருள்களையும் வரவேற்புக்குரிய சந்தனம், குங்குமம், பன்னீர் முதலியவற்றையும் வைப்பர்.

மாப்பிள்ளை தோழனுடன் வந்து சேர்ந்ததும் தோழன் மணமகனின் காலைக் கழுவுவார். தோழனுக்கு அன்பளிப்பாக மாப்பிள்ளை தங்க மோதிரம் அணிவிப்பார். சுமங்கலிகள் இருவர் ஆரத்தி எடுத்துத் திலகம் வைத்தலும், மாமனார் மாப்பிள்ளைக்கு மலர்மாலை சூட்டி வரவேற்பதும் வழக்கம்.(பிராமணக் கல்யாண வீடுகளில் காசி யாத்திரை, சாமா வர்த்தனம் எனும் கிரியைகளும் இடம்பெறும்.) அதன் பின் மாப்பிள்ளையைத் தோழன் நிறைகுடத்துக்கு வலப்பக்கமாக அழைத்துவந்து மணவறையில் அமரச் செய்வார். ஆயினும் நாட்டார் வழக்காறு சார்ந்த திருமணச்சடங்குகளில் இத்தகைய நடைமுறைகள் பல இடம்பெறுவதில்லை. வெவ்வேறு பிரதேசங்களில் வேறுபட்ட சடங்குகள் மேற்கொள்ளப்படுவதைக் காணமுடிகிறது.

## திருமண மேடையில் நடைபெறும் கிரியைகள்

### 1. பவித்திரம் அணிதல் :

திருமணக் கிரியைகளை நிகழ்த்தும் சிவாசாரியார் தான் செய்யப்போகும் கருமத்திற்கு இறைவனிடத்தும் பெரியோர்களிடத்தும் ஆசிவேண்டுதல் அனுக்ஞை எனப்படும். அதனைத் தொடர்ந்து சங்கற்பம் நடைபெறும். அதாவது தான் செய்யப்போகும் கிரியைக்காக உள்ளத்தை உறுதி செய்தலாகும். இதனைத் தொடர்ந்து விநாயகர் ஆசமனம், பஞ்சகௌவிய பூசை என்பன இடம்பெறும்.

### 2. அங்குரார்ப்பணம் :

நவதானியங்கள் முளைப்பதற்காக இடுதல், மணமகன் மணமகள் ஆகிய இரு பகுதியினரிலும் உள்ள ஐந்து அல்லது மூன்று சுமங்கலிப் பெண்கள் தமது கைகளால் சட்டியில் நவதானியம் இடுவர். எல்லா நன்மைகளும் கிடைக்க வேண்டுமென்பதே இதன் நோக்கமாகும்.

### 3. இரட்சாபந்தனம் :

இது காப்புக் கட்டுதல் எனப்படும். மணமகன், மணமகள் ஆகியோருக்குத் தனித்தனியாகக் காப்புக் கட்டப்படும். மணமக்கள் பாவங்களிலிருந்து நீங்கித்

தொடங்கிய காரியத்தைத் தடையின்றி முடிக்கவும் இடையில் குற்றங்கள் முதலியன தீண்டாதிருக்கவும் கையிற் காப்புக் கட்டப்படும்.

### 4. கும்ப பூசை :

மணமகனுக்குக் காப்புக்கட்டியதன் பின்னர் ஆசாரியார் முறைப்படி சிவனதும் சக்தியினதும் அருளைப் பெறுவதற்காகச் செய்யப்படுவது கும்ப பூசை எனப்படும்.

### 5. நவக்கிரக பூசை :

வாழ்க்கையில் அடியெடுத்து வைக்கும் மணமக்களுக்கு இப்பூசை நவக்கிரகங்களின் அருட்பார்வையைக் கொடுக்கும்.

### 6. ஓமம் வளர்த்தல் :

கும்பத்திலே பூசித்த சிவன், சக்தி ஆகியோரின் அருளை நிலைபெறச் செய்வதற்காக அக்கினி வளர்க்கப்படும். இது சிவாக்கினி எனப்படும்.

### 7. பிதிர் ஆசீர்வாதம் :

குடும்ப வாழ்க்கையைத் தொடங்கும் போது அது தவறின்றி நடப்பதற்கு அக்குடும்பத்து முன்னோரது ஆசீர்வாதத்தை வேண்டி, பிதிர்களைத் திருமணத்திற்கு அழைத்து அவர்களது ஆசியைப் பெறுவது இக்கிரியையின் நோக்கமாகும். இக்கிரியைகள் மணமக்களின் தந்தையால் செய்யப்படும்.


### 8. கன்னிகாதானம் :

தட்டொன்றில் வெற்றிலை, பாக்கு, வாழைப்பழம், எலுமிச்சம்பழம், தேங்காய், மஞ்சள் துண்டு, சில்லறைக்காசு, பொன், மலர் போன்ற பொருள்களை வைத்து பெண்ணின் கையைத் தட்டில் வைத்து மணமகளின் தந்தை தட்டையும் மகளையும் சேர்த்துப் பிடிப்பார். அவ்வேளையில் சிவாச்சாரியார் மந்திரம் ஓத, மங்கல வாத்தியங்கள் முழங்க மணமகளின் தாயார் மூன்று முறை வெற்றிலையில் தண்ணீர் விட்ட பின்னர் கன்னியைத் தானமாக மணமகன் கையில் கொடுப்பார்.

### 9. கூறை கொடுத்தல் :

பெண்ணின் திருமணச் சேலை, தாலி, மற்றும் உபசாரப் பொருட்களை வைத்துச் சார்த்திப் பூசித்த பின் பெரியோரினால், அவை ஆசீர்வதிக்கப்படும். பின்னர் மணமகன் மணமகளுக்கு உபசாரமாகக் கூறையைக் கொடுப்பார்.


## 10. தாலி கட்டல் :




மணமகளிடம் கொடுத்த கூறையை மணமகள் அணிந்து வந்த பின், மாங்கல்ய பூசை செய்து அவையோர் ஆசீர்வதிக்க, கெட்டி மேளம் முழங்கத் தாலிகட்டல் நடைபெறும். அதன் பின் மணமகள் மணமகனுக்கு இடப்பக்கமாக அமர்ந்து உமாமகேஸ்வரராகப் பாவனைப்படுத்திக் கிரியைகள் நடைபெறும்.

## 11. மாலை மாற்றுதல் :

பெண்ணின் கழுத்திலிருக்கும் மாலை ஆணுக்கும், ஆணின் கழுத்திலிருக்கும் மாலை பெண்ணுக்குமாக மாற்றப்படும். இது மூன்று முறை நிகழும். வாழ்க்கையில் உடலால், உள்ளத்தால், செயலால் நாமிருவரும் ஒருவரே என்ற தத்துவத்தினை இது விளக்குகிறது.



பால், பழம், தயிர், தேன், சர்க்கரை, நெய், சேர்த்துக்கொள்ளப்பட்ட பதார்த்தத்தை மணப்பெண் முதலில் மணமகனுக்கும், பின்னர் மணமகன் மணப்பெண்ணுக்கும் கொடுப்பர். உயர்ந்த பதார்த்தங்களின் சுவை போன்று மணமக்களது வாழ்வு நலம் பெற வேண்டும் என்பதற்காக இது வழங்கப்படுகிறது. இதுவே இதன் தாற்பரியமாகும்.



## 12. கோ தரிசனம் :

புண்ணியத்தின் வடிவமான பசுவைப் பார்த்தல் நல்ல சகுனம், வாழ்க்கையில் யாவும் வெற்றி பெறும் என்ற நம்பிக்கை மணமக்களுக்கு இதனால் ஏற்படும்.

### 13. ஏழடிவைத்தல் :

மணமகளுடைய கையை மணமகன் பிடித்துக் கொண்டு தோழி, தோழனுடன் அக்கினியை வலம் வருகையில் ஏழடி வந்ததும் அம்மி மிதித்தல் நடைபெறும். மும்முறை இந்த நிகழ்ச்சி நடைபெறும். இல்வாழ்விலே பெறவேண்டிய ஏழு பொருட்களையும் பெறுவதற்கு இருவரும் ஒத்து முயற்சித்தல் வேண்டும் என்பது ஏழடி வைத்தலின் அர்த்தமாகும். உணவுப்பொருள், உடற்பலம், கடவுள் வழிபாடு, மனஅமைதி, அறிவு, வாழ்வில் வரும் சுகங்கள், யாகத்திற்கு வேண்டிய பொருட்கள் என்பன அவ்வேழு பொருட்களாகும்.

### 14. அம்மி மிதித்தல் :

மணமகளது காலை மணமகன் தூக்கி அம்மி மீது வைப்பார். இதன் கருத்து, பெண்ணானவள் அந்தக் கல்லைப் போல மன உறுதியுடனும், கற்புடனும் வாழ வேண்டும் என்பதாகும்.

### 15. அருந்ததி பார்த்தல் :



இது ஒழுக்கம், அறிவு, பிறனில் விழையாமை, உறுதிப்பாடு ஆகியவற்றின் உயர்வு குறித்துக் காட்டப்படும். இது பெண்ணுக்கு மாத்திரமன்றி ஆணுக்கும் உரியதாகும்.

### 16. மோதிரம் எடுத்தல் :

மணமக்கள் கூச்சம் தெளியவும் சபைச் சிறப்புக்காகவும் மோதிரத்தை மஞ்சள் கலந்த நீரில் போட்டு, இருவரும் ஒரே சமயத்தில் வலது கைவிட்டு எடுக்க வேண்டும். மணமக்கள் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து வாழ வேண்டும் என்ற தத்துவத்தையே இது குறிக்கிறது.

இறுதியாக ஆசாரியார் பூரணாகுதி செய்து மணமக்களை ஆசீர்வதிப்பார். அதன் பின்னர் பெரியோர் அறுகரிசி இட்டு ஆசீர்வதிப்பர். மணமக்கள் **'மரு'** உண்ணுதல் மரபு. மருவி உண்ணுதல் என்றால் கலந்து உண்ணல் என்பது பொருள். எங்கேயோ பிறந்து வளர்ந்த இருவர் திருமணத்தின் பின் ஒரே இடத்தில் கலந்து முதல் முதல் உண்ணுதல் **'மருவி உண்ணுதல்'** எனப்படும். இதுவே பூதாக்கலம்(கலத்தில் போடுதல்) எனப்படும். இந்துமதத் திருமணத்திலேயே இத்தகைய சடங்குகள் இடம்பெறுகின்றன. இவை ஒவ்வொன்றும் அர்த்தமுள்ள சடங்குகளாகவே அமைகின்றன.

**மேல்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

1. சடங்குகள் என்றால் என்ன?
2. நிச்சயதார்த்தம் என்றால் என்ன?
3. நவக்கிரக பூசை எதற்காக மேற்கொள்ளப்படுகிறது?
4. அம்மி மிதித்தல் என்பதன் அர்த்தம் என்ன?
5. பூதாக்கலம் என்றால் என்ன?

**செயற்பாடு**

01) இந்துமதத் திருமணச்சடங்குகள் தொடர்பான தகவல்களைத் திரட்டி ஒப்படை ஒன்று தயாரிக்குக.

**பாடச்சுருக்கம்**

- சடங்குகள் இனத்தின் பண்பாட்டுப் பிரதிபலிப்புகளாகும்.
- பல்வேறு வகையான சடங்குகள் மனித வாழ்க்கையில் இடம்பெறுகின்றன.
- ஆண், பெண் இருபாலாரையும் இல்லறம் எனும் வாழ்வியலில் இணைக்கும் சடங்கே திருமணச் சடங்காகும்.
- நிச்சயதார்த்தம் திருமணத்திற்கு முன் நடைபெறும் நிகழ்வாகும்.
- திருமண மேடையில் பவித்திரம் அணிதல், அங்குரார்ப்பணம், இரட்சாபந்தனம், கும்பபூசை, நவக்கிரக பூசை, ஓமம் வளர்த்தல் போன்ற கிரியைகள் நடைபெறும்.
- கன்னிகாதானம் என்பது கன்னியைத் தானமாக மணமகனுக்குக் கொடுத்தல் ஆகும்.